
**ஜூலை – 10**

# TNPSC துளிகள்

- எலோன் மஸ்க் அமெரிக்காவில் 'அமெரிக்கக் கட்சி' என்ற புதிய அரசியல் கட்சியை உருவாக்க உள்ளதாக அறிவித்துள்ளார்.
- பிரதமர் மோடிக்கு மிக வரலாற்றுச் சிறப்புமிக்க அவரது அர்ஜென்டினா பயணத்தின் போது 'பியூனஸ் அயர்ஸ் நகரத்தின் திறவுகோல்' என்ற அடையாளச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.
- பொது விநியோக கட்டமைப்பின் (PDS) கீழ், ரேஷன் பொருள் விநியோகத்திற்காக என ஆதார் அடிப்படையிலான முக அடையாள அங்கீகார தொழில்நுட்பத்தினை (FaceAuth) பயன்படுத்தும் இந்தியாவின் முதல் மாநிலமாக இமாச்சலப் பிரதேசம் மாறியுள்ளது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## ஐந்தாவது தமிழ்நாடு காவல் ஆணையம் - சிறைச்சாலை மரணங்கள்




- ஐந்தாவது தமிழ்நாடு காவல் ஆணையமானது, காவல்துறையினரின் கடும் அதிகாரத் துஷ்பிரயோகம் மற்றும் சந்தேகத்திற்குறிய நபர்களை மிருகத்தனமாக நடத்துவதற்கு எதிராக கடுமையான ஒழுங்கு முறை நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியது.
- வாய்மொழி வாயிலான துஷ்பிரயோகம், தவறான வகையில் தடுப்புக் காவலில் வைத்திருத்தல், போலி வழக்குப் பதிவு, பாரபட்சமான விசாரணைகள் மற்றும் சில குறிப்பிட்ட நபர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுத்தல் வழக்குகளில் உடனடி உள் விசாரணை மற்றும் உடனடி நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டி அந்த ஆணையம் வலியுறுத்தியது.
- தேவையற்ற கைதுகளைக் குறைப்பதற்கு அர்னேஷ் குமார் மற்றும் பீகார் மாநிலம் ஆகியோருக்கு இடையிலான வழக்கில் வெளியிடப்பட்ட உச்ச நீதிமன்றத்தின் முக்கிய வழிகாட்டுதல்களை கடுமையாக செயல்படுத்த ஆணையம் பரிந்துரைத்தது.
- காவல் நிலையங்களில் பெண்கள், குழந்தைகள், மருத்துவ ரீதியாகத் தகுதியற்ற நபர்கள் மற்றும் மது அருந்திய நபர்களை தடுப்புக் காவலில் வைப்பது கட்டாயமாக கண்டிக்கப் படுகிறது.

- கைது செய்யப்பட்ட அனைத்து நபர்களுக்கும் கட்டாய மருத்துவப் பரிசோதனை மேற் கொள்வது பரிந்துரைக்கப் படுவதோடு மருத்துவ சோதனையின் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் அதன் பிறகான நடவடிக்கையினை எடுக்கவும் பரிந்துரைக்கப்பட்டது.
- காவலில் உள்ள எந்தவொரு நபரையும் பாதுகாப்பதற்காக வேண்டி போதுமான காவல் துறையினர் பணி நேரத்தில் இருக்க வேண்டும்.

## ADT 59 நெல் வகை




- ஆடுதுறையில் உள்ள தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிறுவனம் (TRRI) ஆனது, ADT 59 என்ற புதிய குறுகிய கால சாகுபடி கொண்ட நெல் வகையை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது காவிரி டெல்டா விவசாயிகளிடையே குறுவை சாகுபடி பயிர்களுக்காக வெகுவாக பிரபலமடைந்து வருகிறது.
- ADT 59 வகையானது, ADT 37 மற்றும் ASD 16 போன்ற சில வழக்கமான வகைகளுடன் ஒப்பிடும் போது 15 முதல் 20% அதிக மகசூலை அளிக்கிறது.
- குறுவை சாகுபடிச் சூழல்களின் கீழ் விவசாயிகள் ஏக்கருக்கு 4,000 கிலோ கிராம் வரை அறுவடை செய்கிறார்கள்.
- இந்த வகைக்கு என வழக்கமான ரகங்களுக்குப் பயன்படுத்தும் உர உள்ளீட்டில் 50% மட்டுமே தேவைப்படுகிறது என்பதோடு இது விவசாயிகளுக்கு செலவு குறைந்ததாக அமைகிறது.
- ADT 59 ஆனது உப்புத் தன்மை மற்றும் தண்டு துளைப்பான், குலை நோய் மற்றும் பழுப்பு இலைப்புள்ளி போன்ற பூச்சித் தாக்குதல்களுக்கு எதிராக வலுவான எதிர்ப்புத் திறனைக் கொண்டுள்ளது என்பதோடு ஆரோக்கியமானப் பயிர்களின் வளர்ச்சியை இது உறுதி செய்கிறது.
- 110 முதல் 115 நாட்கள் வரையிலான தானிய முதிர்ச்சி காலத்துடன், இந்த வகையானது குறுவை, நவரை மற்றும் கோடை காலச் சாகுபடிக்கு மிகவும் பொருத்தமானதாகும்.

## அறிஞர் அண்ணா தலைமைத்துவ விருதுகள் 2025

- தமிழ்நாடு அரசுப் பள்ளிகளுக்கு அறிஞர் அண்ணா தலைமைத்துவ விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படுகின்றன.
- 100 அரசுப் பள்ளித் தலைமையாசிரியர்கள் இந்த விருதுகளைப் பெற்றனர்.
- கல்வித் துறை அமைச்சர் சிறந்த தமிழகப் பள்ளிகளின் முதல்வர்களுக்கு விருதுகளை

வழங்கினார்.

- 4,552 பள்ளிகள் கற்றல் சார்ந்த சவாலுக்கான பாராட்டுச் சான்றிதழ்களைப் பெற்றன.
- உள்கட்டமைப்பிற்காக திருச்சி பள்ளிகளுக்கு 10 லட்சம் ரூபாய் நிதி வழங்கப்பட்டது.
- 76 சிறந்தப் பள்ளிகளுக்கு பேராசிரியர் அன்பழகன் விருதுகள் வழங்கப்பட்டன.




## காவிரி டெல்டா பகுதியில் குறுவை வேளாண்மை 2025

Paddy coverage during Kar/*Kuruvai* Sornavari in 2025-26 (in acres)

| District | | *Kuruvai* coverage* 2024 | *Kuruvai* coverage* 2025 |
|---|---|---|---|
| **Delta (*Kuruvai*)** | Cuddalore | 23,700 | 24,996 |
| | Tiruchi | 1,991 | 2,922 |
| | Ariyalur | 2,470 | 4,503 |
| | Thanjavur | 89,379 | 1,02,880 |
| | Nagapattinam | 1,279 | 8,563 |
| | Mayiladuthurai | 87,174 | 79,682 |
| | Tiruvarur | 43,620 | 86,092 |
| | Delta total | 2,49,613 | 3,09,639 |
| **Non-delta** | Kar (southern districts) | 30,786 | 45,184 |
| | *Kuruvai* (Including April & May planting) | 35,973 | 25,933 |
| | Sornavari (northern districts) | 2,40,724 | 2,57,379 |
| | Non-delta total | 3,07,483 | 3,28,495 |
| | **Grand total** | **5,57,096** | **6,38,134** |

*As on June 30, 2025

- தமிழ்நாட்டின் காவிரி டெல்டா பகுதியில், 5.7 லட்சம் ஏக்கர் இலக்கில் இதுவரையில் 3.09 லட்சம் ஏக்கர் பயிரிடப் பட்டுள்ளதுடன் குறுவை (குறுகிய காலத்தில் நெல் சாகுபடி) வேளாண்மை சிறப்பாகத் தொடங்கியுள்ளது.
- இது கடந்த ஆண்டை விட 60,000 ஏக்கர் அதிகமாகும் என்பதோடு இது பிரதான டெல்டா பகுதியைத் தவிர்த்து வேறொரு பகுதியில் பதிவான மிகவும் சிறந்த முன்னேற்றத்தைக் காட்டுகிறது.
- டெல்டா பகுதிக்கு மிகவும் முக்கியமான மேட்டூர் அணையானது, கிட்டத்தட்ட 93 TMC

அடி (ஆயிரம் மில்லியன் கன அடி) நீர் வரத்துடன் நிரம்பியுள்ளது.

- ஜூன் மாதத்தில், தமிழ்நாடு மாநிலம் பிலிகுண்டுலுவில் 42.25 TMC அடி நீர் வரத்தினைப் பெற்றது என்பதோடு இது வழக்கமான 9.19 TMC வரத்தினை விட மிக அதிகமாகும்.

## சமூக நீதி விடுதிகள்

- தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு நடத்தும் விடுதிகளும் இனி 'சமூக நீதி விடுதிகள்' என்று அழைக்கப்படவுள்ளது.
- சாதி மற்றும் சமய அடையாளங்களை நீக்கி இந்த மாணவர்களிடையே சமத்துவத்தை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.
- பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த 1.79 லட்சம் ஏழ்மை நிலையில் உள்ள மற்றும் விளிம்பு நிலையில் உள்ள மாணவர்களுக்கு உதவும் வகையில், மாநில அரசு 2,739 விடுதிகளை நடத்தி வருகிறது.
- பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் சாதி வேறுபாடுகளைக் குறைப்பதற்காக என ஓய்வு பெற்ற நீதிபதி K. சந்துரு தலைமையிலான குழு வழங்கிய பல்வேறு பரிந்துரைகளைத் தொடர்ந்து இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டது.




## ஜாரோஸ் செயலி


- ஜூலை 01 ஆம் தேதி முதல், நாமக்கல் மாவட்டத்தில் உள்ள உணவக உரிமையாளர்கள் அதிக இடைத்தரகுக் கட்டணம் மற்றும் மறைமுகமாக வசூலிக்கப்படும் கட்டணங்கள் காரணமாக ஸ்விக்கி மற்றும் சோமாட்டோ ஆகிய செயலிகளைப் பயன்படுத்துவதை நிறுத்தியுள்ளனர்.
- இனி அதற்குப் பதிலாக, கடலூர் மாவட்டத்தில் உள்ள சிதம்பரத்தில் உருவாக்கப்பட்ட தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்ட உணவு விநியோகச் செயலியான ஜாரோஸ் என்பதைப் பயன்படுத்தத் தொடங்கினர்.
- ஜாரோஸ் ஆனது, உணவுக் கூடங்களுக்கு 1,500 ரூபாய் (+GST), உணவகங்களுக்கு 3,000 ரூபாய் (+GST) என்ற வீதத்தில் ஒரு ஆர்டருக்கு இடைத் தரகு இல்லாமல் குறைந்த

விலையிலான மாதாந்திரச் சந்தா மாதிரியில் இயங்குகிறது.

- சுமார் 50 உணவகங்கள் இந்தத் தளத்தில் இணைந்துள்ளதன் மூலம் முந்தைய சேவை வழங்கீட்டு நிறுவனங்கள் மாதந்தோறும் 20,000 முதல் 30,000 ரூபாய் வசூலித்ததுடன் ஒப்பிடும் போது 90% செலவுகளை மிச்சப் படுத்தியுள்ளன.
- திருச்செங்கோடு மற்றும் இராசிபுரத்தில் உள்ள இதர உணவக உரிமையாளர்களும் விரைவில் ஜாரோஸ் செயலியில் சேரத் திட்டமிட்டுள்ளனர்.




## காசநோய் இறப்பில்லாத் திட்டம் (TN-KET)




- காசநோய் (TB) உயிரிழப்புகளுக்கான ஒரு முன்கணிப்பு மாதிரியை அதன் காசநோய் ஒழிப்புத் திட்டத்தில் ஒருங்கிணைத்த இந்தியாவின் முதல் மாநிலமாக தமிழ்நாடு மாறி உள்ளது.

- இந்த மாதிரியை இந்திய மருத்துவ ஆராய்ச்சி சபையின் தேசியத் தொற்றுநோயியல் நிறுவனம் (ICMR-NIE) உருவாக்கியுள்ளது.
- 2022 ஆம் ஆண்டு ஜூலை மற்றும் 2023 ஆம் ஆண்டு ஜூன் மாதங்களுக்கு இடையில் அரசு நடத்தும் மையங்களில் சிகிச்சைப் பெற்ற 56,000 காசநோய் நோயாளிகளிடம் இருந்து பெற்ற தரவைப் பயன்படுத்தியது.
- மிகவும் கடுமையாக நோய் வாய்ப்பட்ட காசநோய் நோயாளிகளை முன்கூட்டியே கண்டறிந்து, அவர்களின் மருத்துவமனை அனுமதியை மிகவும் விரைவுபடுத்தி, இந்த உயிரிழப்புகளைக் குறைக்க உடனடி சிகிச்சையைத் தொடங்குவதே இதன் பெரும் குறிக்கோள் ஆகும்.
- இந்தப் புதிய அமைப்பானது மாநிலத்தின் காசநோய் சேவை (கடுமையான காசநோய் வலையமைப்புச் செயலி) கட்டமைப்பில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.
- இது தமிழ்நாடு காசநோய் இறப்பில்லாத் திட்டம் (TN-KET) மருத்துவ நலச் சேவை என்ற முன்னெடுப்பின் கீழ் பயன்படுத்தப்படும்.
- இச்செயலியானது மிகக் குறைந்த உடல் எடை, நிற்க இயலாமை அல்லது HIV (மனித நோயெதிர்ப்பு குறைபாடு வைரஸ்) பாதிப்புடன் சேர்த்து இணைத் தொற்று போன்ற ஆபத்துக் காரணிகளின் அடிப்படையில் நோயாளிகளைக் குறியிடுகிறது.

## சிறப்பு அதிகாரிகளின் பதவிக் கால நீட்டிப்பு 2025

**Since January 5, over 90,000 posts in rural local bodies spread over 28 districts went unoccupied**

| Office/seat | Number of vacancies |
|---|---|
| Village Panchayat president | 9,624 |
| Village Panchayat ward member | 76,746 |
| Panchayat Union Chairperson | 314 |
| Panchayat Union ward member | 5,090 |
| District Panchayat chairperson | 28 |
| District Panchayat ward member | 515 |
| TOTAL | 92,317 |


- தமிழக மாநில அரசானது, கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளை நிர்வகிப்பதற்கான சிறப்பு அதிகாரிகளின் (SOs) பதவிக் காலத்தினை 2026 ஆம் ஆண்டு ஜனவரி 05 ஆம் தேதி வரை மேலும் ஆறு மாதங்களுக்கு நீட்டித்துள்ளது.
- இந்த நீட்டிப்பு ஆனது 28 மாவட்டங்களில் உள்ள 9,581 கிராமப் பஞ்சாயத்துகள், 314 பஞ்சாயத்து ஒன்றிய சபைகள் மற்றும் 28 மாவட்டப் பஞ்சாயத்துகளில் பொருந்தும்.
- இந்த நீட்டிப்பை நடைமுறைப்படுத்த ஓர் அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு, அடுத்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் ஒரு மசோதாவாக அது மாற்றப்படும்.
- 2024 ஆம் ஆண்டு ஜனவரி 05 ஆம் தேதியன்று தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் பதவிக் காலம் முடிவடைந்ததையடுத்து SO அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.
- இங்கு உள்ளாட்சி அமைப்புகளை மறுசீரமைப்பதில் ஏற்பட்டத் தாமதங்கள் மற்றும்

நிலுவையில் உள்ள மன்ற அமைப்புகளின் தொகுதி மறுசீரமைப்பு ஆகியவற்றினை நீட்டிப்புக்கான காரணங்களாக அரசாங்கம் குறிப்பிட்டது.

# தேசியச் செய்திகள்

## பேராசிரியர்களுக்கான விதிகள் 2025

- தேசிய மருத்துவ ஆணையம் (NMC) ஆனது, இந்தியாவில் மருத்துவக் கல்வியை நன்கு விரிவுபடுத்துவதற்காக பேராசிரியர்களுக்கான புதிய விதிமுறைகளை அறிமுகப்படுத்துகிறது.
- மருத்துவ சபையானது, மருத்துவக் கல்லூரிகளின் செயல்திறனை அதிகரிப்பதற்காக பேராசிரியர்களுக்கான தகுதி விதிமுறைகளை திருத்தியமைக்கிறது.
- தேசிய மருத்துவ ஆணையத்தின் 2025 ஆம் ஆண்டு விதிகள் ஆனது, பேராசிரியர் சேர்க்கைகளை எளிதாக்கி, மருத்துவப் படிப்புச் சேர்க்கைகளின் ஒரு அதிகரிப்பினை மேம்படுத்துகின்றன.
- இந்தப் புதிய NMC விதிமுறைகள் ஆனது, மருத்துவ பேராசிரியர்கள் குழுவை நன்கு விரிவுபடுத்துவதற்கான திறனில் கவனம் செலுத்துகின்றன.
- புதிய NMC 2025 வழிகாட்டுதல்கள் கற்பித்தல் சாராத மருத்துவமனைகளை மருத்துவம் கற்பித்தல் மையங்களாக மாற்ற அனுமதிக்கின்றன.
- MBBS மற்றும் MD/MS இடங்களை விரிவுபடுத்துவதை ஆதரிப்பதற்காக என்று மருத்துவ பேராசிரியர்கள் விதிகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.




NMC WILL HAVE FEWER MEMBERS, MOST OF THEM NOMINATED

| | Medical Council of India | National Medical Commission |
|---|---|---|
| Members | **100+** | **25** |
| Tenure | **5 yrs** | **4 yrs** (part-time members 2 yrs) |
| Appointment | **70%** Elected | Majority nominated |
| Extension | Could be renominated/ reelected | Those nominated by Centre cannot be renominated |
| Quorum | **15 of 100+** members | **13 of 25** members |
| Meeting mandate | At least once a year | Every quarter |

## தேசிய உயிரி வங்கி


- மத்திய அரசானது, டெல்லியில் உள்ள அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி சபையின் மரபணு மற்றும் ஒருங்கிணைந்த உயிரியியல் கல்வி நிறுவனத்தில் (CSIR-IGIB) Phenome India எனும் தேசிய உயிரி வங்கியைத் தொடங்கியுள்ளது.

- இந்த உயிரி வங்கியானது, சுமார் 10,000 என்ற அளவுப் பன்முகத் தன்மை கொண்ட இந்தியப் பங்கேற்பாளர்களிடமிருந்து மரபணு, வாழ்க்கை முறை மற்றும் மருத்துவத் தரவைச் சேகரிக்கும்.
- இது ஐக்கியப் பேரரசின் உயிரி வங்கியை மாதிரியாகக் கொண்டுள்ளது.
- இது ஆரம்பகால நோய்களை கண்டறிதல் மற்றும் நீரிழிவு, புற்றுநோய் மற்றும் அரிய மரபணு கோளாறுகள் போன்ற பாதிப்புகளுக்கு வேண்டி நன்கு தனிப்பயனாக்கப்பட்ட சிகிச்சைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது மத்திய உடல் பருமன் மற்றும் மிகச் சிக்கலான பல்வேறு பாதிப்பு அறிகுறிகளைக் கொண்ட பாதிப்புகள் போன்ற இந்தியாவினைச் சார்ந்த சுகாதாரப் பிரச்சினைகளில் கவனம் செலுத்துகிறது.




## சர்வதேசச் செய்திகள்

### மௌனா லோவா பருவநிலை நிலையம்




- ஹவாயில் உள்ள மௌனா லோவா பருவநிலை ஆய்வகத்திற்கு நிதியளிப்பதை நிறுத்த அமெரிக்க அரசு திட்டமிட்டுள்ளது.
- இதன் விளைவாக உலகின் மிகவும் நீண்ட காலமாக இயங்கும் கார்பன் டை ஆக்சைடு

கண்காணிப்பு நிலையங்களில் ஒன்று 65 ஆண்டுகளுக்குப் பிறகு மூடப்பட உள்ளது.

- மௌனா லோவா நிலையம் ஆனது 1958 ஆம் ஆண்டு அறிவியலாளர் சார்லஸ் கீலிங் என்பவரால் நிறுவப்பட்டது.
- வளிமண்டல கார்பன் டை ஆக்சைடு ($CO_2$) பற்றிய நிலையான தரவை வழங்கிய இது "கீலிங் வளைவை" உருவாக்கியது.
- இந்த ஆய்வகத்தின் உயரமான மற்றும் தொலைதூர அமைவிடமானது $CO_2$ அளவைத் துல்லியமாகக் கண்காணிக்க உதவுவதோடு, மனிதனால் இயக்கப்படும் பருவநிலை மாற்றத்தை உறுதிப்படுத்த உதவியது.

# மாநிலச் செய்திகள்

## ஆந்திரப் பிரதேசத்தில் இலவசக் கல்விப் பயன்பாட்டுப் பொருள் தொகுப்புகள்




- ஆந்திரப் பிரதேச மாநில அரசானது, 'சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் வித்யார்த்தி மித்ரா தொகுப்புகள்' திட்டத்தினை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இந்தத் திட்டமானது, 2025–26 ஆம் கல்வியாண்டில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் சுமார் 35 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு இலவசக் கல்வித் தொகுப்புகளை வழங்குவதற்கானதாகும்.
- சீருடைகள், காலணிகள், இடுப்புப் பட்டைகள், காலுறைகள், பள்ளிப் பைகள், பாடப் புத்தகங்கள், குறிப்பேடுகள், பயிற்சிப் புத்தகங்கள் மற்றும் அகராதிகள் ஆகியவை இந்தத் தொகுப்பில் அடங்கும்.
- இந்தத் திட்டமானது முந்தைய ஜகனன்னா வித்யா கனுக்கா தொகுப்பு வழங்கீட்டுத் திட்டத்திற்கு மாற்றாக அமைகிறது.

# இதரச் செய்திகள்

## தலாய் லாமாவின் அறக்கட்டளை – காடென் போட்ராங்

- இமாச்சலப் பிரதேசத்தில் உள்ள தர்மசாலையில் உள்ள 14வது தலாய் லாமா, முதல் முறையாக இந்தப் பதவி வரிசையானது அவருக்குப் பிறகும் தொடரும் என்று நன்கு வலியுறுத்தி உள்ளார்.
- வாரிசுரிமை அல்லது 15வது தலாய் லாமாவை காடென் போட்ராங் அறக்கட்டளை முடிவு செய்யும்.

- இது தலாய் லாமாவின் வாரிசை "தங்க கலசத்தினை" பயன்படுத்தி குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கும் கிங் வம்ச பாரம்பரியத்தை குறிப்பிட்டுக் காட்டுகிறது.
- தலாய் லாமா 1959 ஆம் ஆண்டிலிருந்து இந்தியாவில் வசித்து வருகிறார்.
- 1951 ஆம் ஆண்டில் சீனர்கள் திபெத்தை அவர்களின் பிராந்தியத்தில் இணைத்த பிறகு, அவர் திபெத்தில் உள்ள லாசாவை விட்டு வெளியேறினார்.
- காடென் போட்ராங் என்பது திபெத்திய அரசாங்கத்தின் பெயர் ஆகும்.
- இது 5வது தலாய் லாமா, நகாவாங் லோப்சாங் கியாட்சோ அல்லது 'ஐந்தாவது பெருந் தலைவர்' என்பவரால், ஒருங்கிணைந்தத் திபெத்தின் ஆன்மீகம் மற்றும் அரசியல் தலைமையாக நிறுவப்பட்டது.
- இது டிரெபுங் மடாலயத்தில் உள்ள தலாய் லாமாக்களின் வரலாற்றுப் பதவியின் ஒரு பெயரிலிருந்து உருவாக்கப்பட்டது.
- 2011 ஆம் ஆண்டில், 14வது தலாய் லாமா தனது பதவியின் ஆன்மீகம் மற்றும் அரசியல் அதிகாரங்களைப் பிரிக்க முடிவு செய்ததால் காடென் போட்ராங் அறக்கட்டளையை அவர் அமைத்தார்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★